# ‘மகிந்த சிந்தனை’ பயங்கரவாதப் படுகொலைகள்

## துண்டிக்கப்பட்ட நிலையில் மீட்பு

அளவெட்டி பகுதியில் கடந்த மாதம் 31ம் திகதி முதல் காணாமல்போன இளைஞர் ஒருவர், தலை துண்டித்து படுகொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கடந்த 10ம் திகதி சனிக்கிழமை காலை இவரது சடலம், தலை துண்டிக்கப்பட்ட நிலையில் ஏழாலை மயிலங்காடு பகுதியில் கண்டெடுக்கப்பட்டது. அளவெட்டி பத்துப்பனையடியைச் சேர்ந்த தனியார் பேருந்து (மினிபஸ்) நடத்துநரான கணேசன் சுரேஷ் (22) என்பவரே படுகொலை செய்யப்பட்டவராவார். இவரது சடலம் தலை துன்டிக்கப்பட்ட நிலையில் உடலுக்கு அருகே தலையும் கிடந்துள்ளது. உடலில் அடிகாயங்களும் காணப்பட்டுள்ளன.

*சேருநுவர*

## இளைஞன் சுட்டுக்கொலை

திருகோணமலை சேருநுவரப் பகுதியில் கடந்த 9ம் திகதி வெள்ளிக்கிழமை இரவு தமிழ் இளைஞரொருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சேருநுவர தங்கநகர் பகுதியிலேயே வெள்ளியிரவு 8.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வீடொன்றுக்குச் சென்ற துப்பாக்கிதாரிகள் அங்கிருந்த இளைஞனை வீட்டுக்கு வெளியே அழைத்து சுட்டுக் கொன்று விட்டுச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவத்தில் கிருஷ்ணபிள்ளை அமலதாஸ் (25) என்ற இளைஞன் உயிரிழந்துள்ளார்.

*மடு*

## தேவாலயத்தை நோக்கிய எறிகணை வீச்சில் சிறுவன் பலி, பெண் படுகாயம்

மன்னார் மடு மாதா தேவாலய வளாகத்தினை நோக்கி சிறீலங்காப் படையினர் நடத்திய எறிகணை வீச்சுத் தாக்குதலில் சிறுவன் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். வயோதிபப் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மடு மாதா வளாகம் நோக்கி படையினர் செறிவான எறிகணை வீச்சுத் தாக்குதலை கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் நடத்தினர். மடுமாதா தேவாலய அலுவலகத்திலிருந்து 10 மீற்றர் தொலைவில் எறிகணைகள் வீழ்ந்து வெடித்துள்ளன. இதன்போது அங்கு விளையாடிக் கொண்டிருந்த 5 வயதுச் சிறுவனான அலோசியஸ் அனோஜன் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்ட வேளையில் இடைவழியில் உயிரிழந்துள்ளார். சாளம்பன் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து மடு தேவாலயப் பகுதியில் தனது குடும்பத்துடன் வாழ்ந்த சிறுவனே உயிரிழந்துள்ளார். இதே வேளை, இந்த எறிகணை வீச்சுத் தாக்குதலில் 76 வயதான திரேசா என்ற வயோதிபப் பெண்ணும் படுகாயமடைந்துள்ளார்.



## குடும்பஸ்தர்கள் இருவர், சகோதரர்கள் இருவர் சரண்

சிறீலங்காப் படையினர் மற்றும் அவர்களுடன் இணைந்து செயற்படும் துணை இராணுவக் குழுக்களால் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து சகோதரர்கள் உட்பட மேலும் நால்வர் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை சரணடைந்துள்ளனர். றக்கா வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 59 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தை ஒருவரும் உடுப்பிட்டி அகதிமுகாமில் வசித்து வரும் 47 வயதுடைய 4 பிள்ளைகளின் தந்தை ஒருவரும் கோயிலாக்கண்டி, கைதடியைச் சேர்ந்த 22, 24 வயதுகளை உடைய சகோதரர்கள் இருவருமே சரணடைந்துள்ளனர்.

## யாழில் மூவர் காணாமல் போயுள்ளனர்

அம்மன் வீதி கந்தர்மடம் யாழ்ப்பாணத்தை சேர்ந்த உயர்தர மாணவரான கனகசபாபதி சஞ்சீவன் (21) என்பவர் கடந்த 09.11.2007, அன்று காணாமல் போயுள்ளார். இவர் குறித்தநாள் ஏழாலைப் பகுதியிலிருந்து உந்துருளியில் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது அச்செழு சிறீலங்காப் படைமுகாமில் வைத்து படையினர் இவரை விசாரணைக்கு உட்படுத்திய பின்னர் காணமற்போயுள்ளார் என்று அவரது பெற்றோரால் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இடைக்குறிச்சி வரணியைச் சேர்ந்த குலசிங்கம் சிவகுமார் (24) என்பவர் கடந்த 10.11.2007, அன்று காணாமல் போயுள்ளார். சம்பவத்தன்று இவர் வேலைக்குச் சென்றதாகவும் இதுவரை வீடு திரும்பவில்லை எனவும் அவரது மனைவி யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

தங்கராசா ஜெயந்தன் (22) என்பவரும் காணாமல் போயுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

*பொத்துவில்*

## படையினரின் தாக்குதலில் பலியான மூவரும் பொதுமக்கள்

பொத்துவில் ரொட்டை பகுதியில் சிறீலங்கா விசேட அதிரடிப் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த மூவரும் அப்பாவிப் பொதுமக்களென தெரியவந்துள்ளது. கடந்த 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் இந்த மூவரும் உழவு இயந்திரமொன்றில் சென்று கொண்டிருந்தபோது, ரொட்டை செம்மணிக்குளம் பகுதியில் விசேட அதிரடிப் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்கள். விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற மோதலில் மூவரும் உயிரிழந்ததாகவும், அவர்கள் விடுதலைப் புலிகளெனவும் கூறி அதிரடிப் படையினர் மூவரது சடலங்களையும் பொத்துவில் மருத்துவமனையில் ஒப்படைத்திருந்தனர்.

எனினும், கொல்லப்பட்ட மூவரும் அப்பாவிப் பொதுமக்களென அவர்களது உறவினர்கள் தெரிவித்துள்ளனர். அவர்களில் இருவர் குடும்பஸ்தர்கள். மூன்று பிள்ளைகளின் தந்தையான கண்ணகிபுரத்தைச் சேர்ந்த சாமித்தம்பி செல்வராசா, மூன்று பிள்ளைகளின் தந்தையும் உழவு இயந்திரச் சாரதியுமான எஸ்.குணரத்தினம், க.சுதாகரன் ஆகியோரே படுகொலை செய்யப்பட்டவர்களாவர். மூவரது சடலங்களும் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. செல்வராசாவின் மனைவிக்கு குழந்தை பிறந்து 9 நாட்களே ஆகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

*ஒட்டமாவடி*

## கைக்குண்டு வீச்சில் பெண் உயிரிழப்பு குழந்தை படுகாயம்

வாழைச்சேனை ஒட்டமாவடிப் பகுதியில் கடந்த 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்ற கைக்குண்டு வீச்சில் பெண்ணொருவர் உயிரிழந்ததுடன் ஒன்றரை வயதுக்குழந்தையொன்று படுகாயமடைந்துள்ளது. ஒட்டமாவடியிலுள்ள வீடொன்றின் மீதே அதிகாலை 5 மணியளவில் இந்தக் கைக்குண்டு வீச்சு நடைபெற்றுள்ளது. இந்தக் குண்டு வீச்சில் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த பெண்ணொருவர் உயிரிழந்ததுடன் அங்கு உறங்கிக் கொண்டிருந்த ஒன்றரை வயதுக் குழந்தை படுகாயமடைந்துள்ளது. இதில் முஸ்தாபா ரசீமியா (26) என்ற பெண் கொல்லப்பட்டார். அவரது மகன் மொகமெட் அமர் (2) காயமடைந்துள்ளார். குறிப்பிட்ட வீட்டில் சிறிலங்கா இராணுவ ஒட்டுக்குழு உறுப்பினர் ஒருவர் தங்கியிருந்ததாகவும் அவரை இலக்குவைத்தே இத்தாக்குதல் நடைபெற்றிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. அப்பகுதியில் ஒட்டுக் குழுக்களிடையே மோதல் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

*வீரபுரம்*

## இளம் முஸ்லிம் குடும்பஸ்தர் கடத்திக் கொலை

வவுனியா செட்டிகுளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீரபுரத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் கடந்த 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை சிறீலங்காப் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளது. நேரியகுளத்தை வசிப்பிடமாகக் கொண்ட ஜலால்தீன் கௌது (34) என்ற இரு குழந்தைகளின் தந்தை யாரே கண்கள், கைகள் கட்டப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளார். முன்தினம் சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் வீரபுரத்திலுள்ள நண்பரொருவரின் வீட்டிற்கு சென்ற வேளையிலேயே இவர் இனந்தெரியாத ஆயுதபாணிகளால் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இதேவேளை சுட்டுக் கொல்லப்பட்டவரின் நண்பரையும் ஆயுதபாணிகள் கடத்திச் செல்ல முற்பட்டபோதும் அவர் அவர்களின் பிடியிலிருந்து தப்பியோடி வந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். சுட்டுக் கொல்லப்பட்டவர் திருகோணமலையிலுள்ள கிராம அபிவிருத்தி நிதியத்தில் பணிபுரிபவர் என்றும் செட்டிகுளம் பொலிசார் தெரிவித்தனர்.

## இளம் குடும்பஸ்தர் சிறீலங்கா இராணுவ வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்டார்

உடப்பு செல்வபுரத்தைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தரொருவர் கடந்த 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு வெள்ளை வானொன்றில் வந்த ஆயுதபாணிகளால் கொண்டு செல்லப்பட்டுள்ளார். நள்ளிரவு 12 மணியளவில் இவரது வீட்டிற்கு வெள்ளை வானில் வந்த ஏழு ஆயுதபாணிகளே இவரை வீட்டுக்கு வெளியே இழுத்து வந்து வானில் ஏற்றிக் கொண்டு சென்றுள்ளதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறையிடச் சென்றபோது, விசாரணைக்காக இவர் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக முந்தல் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விஜதஹேரத் மாசகார தெரிவித்தார். ஒரு வாரத்திற்கு முன் இப்பகுதியில் கைது செய்யப்பட்ட இருவர் வழங்கிய தகவலின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். இரு பிள்ளைகளின் தந்தையான தங்கரட்ணம் பாலகிருஷ்ணன் (35) என்பவரே கைது செய்யப்பட்டவராவார். இந்தக் கடத்தலை ஒத்துக்கொண்டதன் மூலம் சிறீலங்கா இராணுவத்தினரே வெள்ளை வானைப் பாவிப்பது உறுதியாகியுள்ளது.